## பாடம் 4: மழை நீர்

**பாடம் : தமிழ்**

**வகுப்பு : 3**

### அ. கடினச் சொற்கள்

1. மழை நீர்
2. வெள்ளம்
3. செல்லுதே
4. உழைப்பு
5. வியர்வை
6. பொன்
7. பொருள்
8. கொடை
9. குளங்கள்
10. அமுதம்
11. தண்ணீர்

### ஆ. எதிர்ச் சொல்

1. உயர்வு x தாழ்வு
2. ஓங்குதல் x குறைதல்

### இ. வினாக்களுக்கு விடையளிக்க.

1. எவற்றை உயர்வாய் எண்ண வேண்டும்?

   உழைப்பை உயர்வாய் எண்ண வேண்டும்.

2. விண்ணின் கொடையாக கருதப்படுவது யாது?

   விண்ணின் கொடையாக கருதப்படுவது மழை நீர்.

3. உழவுக்கும், தொழிலுக்கும் உற்ற துணை எது?

   உழவுக்கும், தொழிலுக்கும் உற்ற துணை மழை.

## புத்தகப் பயிற்சி வினாக்கள்

### அ. ஒரே ஓசையில் முடியும் சொற்களைப் பாடலிருந்து எழுதுக

செல்லுதே - சேமித்தே

ஓடியே - இல்லையே - தேவையே

போலவே - செழிக்கவே - ஓங்கவே.

### ஆ. முதலெழுத்து ஒன்றி வரும் சொற்கள்

பொன்னும் – பொழியும்

மழைநீர் – மண்ணில்

உழைப்பில் – உயர்வாய்

பொன்னும் – பொருளும்

விண்ணின் – வியப்பு

நலமும் – நல்ல

உழவும் – உற்ற

வளமும் – வணங்கி

## இ. இரண்டாவது எழுத்து ஒன்றி வரும் சொற்கள்

மனிதர் – இனிவரும்
விண்ணின் – மண்ணில்
உயர்வாய் – வியப்பு
எண்ண – வேண்டுமே
உலகின் – நலமும்
மனிதர் – வானின்

## ஈ. அகர முதலியைப் பார்த்து பொருள் எழுதுக

பொழியும் – பெய்யும்
செம்மை – சிறப்பு
ஓங்குதல் – உயர்தல்
இல்லம் – வீடு

## உ. சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. "தேக்குதல்" என்ற சொல்லின் எதிர்ச்சொல் ____________

அ) நீக்குதல் ஆ) தெளிதல் இ) சேமித்தல் ஈ) பாதுகாத்தல்

2. "வானின் அமுதம்" இச்சொல் குறிப்பது __________

அ) அமிழ்தம் ஆ) அமிர்தம் இ) சோறு ஈ) மழைநீர்

3. "மழையாகுமே" இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

அ) மழை + யாகுமே ஆ) மழையாய் + யாகுமே
இ) மழை + ஆகுமே ஈ) மழையாய் + ஆகுமே

4. "நினைத்தல்" இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் _________

அ) கூறுதல் ஆ) எண்ணுதல் இ) மறத்தல் ஈ) நனைத்தல்

## ஊ. "பொன்னும் பொருளும்" இது போன்ற "உம்" சேர்ந்துவரும் சொற்களைப் பாடலிருந்து எடுத்து எழுதுக

வீடும் – நாடும்
உழவும் – தொழிலும்
வளமும் – நலமும்
ஒடும் – முழுதும்

## எ. பொருத்துவோமா?

1. நாடும் வீடும் - செழிக்கவே
2. வளமும் நலமும் - நிறைந்திட

3. இல்லத்தின் நீரை - சேமிப்போம்
4. உற்ற துணை - மழையாகுமே
5. உயிராய் எண்ண - வேண்டுமே

**ஏ. இடமிருந்து வலமாகவும், வலமிருந்து இடமாகவும் படித்து பார்ப்போம். விடுபட்ட இடத்தை நிரப்பி மகிழ்வோம்.**

| | |
|---|---|
| மாலா போலாமா? | குழந்தை எங்கே இருக்கு? |
| யானை பூனையா? | பாட்டு பாடும் பாப்பா |
| மேளதாளமே | தாத்தா |
| மாறுமா | கா கா |

AKSHAYA ACADEMY MATRIC. Hr. Sec. SCHOOL
KOSAVAPATTY
KNOWLEDGE IS POWER